கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421,
94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635


# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ்
சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 117 | 02-11-2025 | ஞாயிறு | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 117 | 02-11-2025 | Sunday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## உலகில் எங்கு பாதிப்பு ஏற்பட்டாலும் முதலில் உதவிக்குச் செல்லும் நாடு இந்தியா: பிரதமர் மோடி




ராய்ப்பூர்: நவ.2–

உலகில் எங்கு பாதிப்பு ஏற்பட்டாலும் முதலில் உதவிக்குச் செல்லும் நாடு இந்தியா என்று பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

சத்தீஸ்கரின் நவ ராய்ப்பூரில் பிரம்ம குமாரிகள் அமைப்பின் தியான மையமான சாந்தி ஷிகார் ஐ பிரதமர் நரேந்திர மோடி நேற்று திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, "இன்று உலகில் எங்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டாலும், எங்கு ஒரு பேரழிவு ஏற்பட்டாலும் உதவி வழங்க ஒரு நம்பகமான கூட்டாளியாக இந்தியா உள்ளது. இந்தியா எப்போதும் உதவிக்கு முதலில் செல்கிறது.

ஒவ்வொரு உயிரினத்திலும் கடவுளைக் காண்பவர்கள் நாம். நமது பாரம்பரியத்தில், உலகம் செழிக்கட்டும், அனைத்து உயிரினங்களிடையேயும் நல்லெண்ணம் மேலோங்கட்டும் என்ற பிரார்த்தனையுடன்தான் எந்த ஒரு மத நிகழ்வும் முடிவடைகிறது.

மாநிலங்களின் வளர்ச்சியில்தான் இந்தியாவின் வளர்ச்சி இருக்கிறது. இந்தியாவை வளர்ச்சி பெற வைப்பதற்கான பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. வளர்ந்த இந்தியாவை உருவாக்கும் இந்த பயணத்தில் பிரம்ம குமாரிகள் போன்ற அமைப்புகள் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன. நான் பல பத்தாண்டுகளாக உங்கள் அனைவருடனும் தொடர்பில் இருக்கிறேன். நான் இங்கு விருந்தினராக வரவில்லை. நான் உங்களில் ஒருவன்.

இன்றைய நாள் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இன்று சத்தீஸ்கர் நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைகிறது. ஜார்க்கண்ட், உத்தரா கண்ட் மாநிலங்களும் இன்று 25 ஆண்டுகளை நிறைவு செய்கின்றன. இந்த மாநில மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்தார்.

முன்னதாக, நவ ராய்ப்பூரில் உள்ள ஸ்ரீசத்ய சாய் சஞ்சீவனி மருத்துவமனையில் இதய நோய்களால் பாதிக்கப்பட்டு வெற்றிகரமாக சிகிச்சை அளிக்கப்பட்ட 2,500 குழந்தைகளுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார். இதில், முன்னாள் இந்திய கிரிக்கெட் கேப்டன் சுனில் கவாஸ்கர் கலந்து கொண்டார்.

### இந்தியா சீனா எல்லையில் கடும் பனிப்பொழிவு

காங்டாக்: நவ.2–

இந்தியா, சீனா எல்லையை ஒட்டி அமைந்துள்ள நாதுலா கணவாய், குபுப், சோம்கோ ஏரி உள்ளிட்ட பகுதிகளில் அதிகாலையில் கடும் பனிப் பொழிவு பதிவாகி உள்ளது. இதனால் சிக்கிம் மாநிலத்தில் வெப்பநிலை குறைந்துள்ளது.

உயரமான சில மலைப் பகுதியில் வெப்பநிலை ஜீரோ டிகிரிக்கும் கீழே சென்றுள்ளது. இதனால் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. அடுத்த 24 மணி நேரத்துக்கு மிகவும் மோசமான வானிலை தொடரும். இதையடுத்து சிக்கிம் மாநிலத்துக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

இத்தகவலை இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

## நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ.1248.24 கோடி செலவில் 10 சாலைகள், 2 மேம்பாலங்கள் : முதல்அமைச்சர் திறந்து வைத்தார்

சென்னை, நவ.2–

நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.1248.24 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள 10 சாலைகள் மற்றும் 2 சாலை மேம்பாலங்களை தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (1.11.2025) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத்துறை சார்பில் ஈரோடு, திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவள்ளூர், திருநெல்வேலி, அரியலூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் 1,177 கோடியே 15 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சாலைப்பணிகள் மற்றும் வேலூர் மாவட்டத்தில் 71 கோடியே 9 லட்சம் ரூபாய் செலவில் ரெயில்வே கடவுகளுக்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள இரண்டு சாலை மேம்பாலங்கள் ஆகியவற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு சாலை உட்கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு அரசு தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை உருவாக்கிடும் வகையில், நெடுஞ்சாலை துறை வாயிலாக மாநிலம் முழுவதும் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், மேம்பாடு செய்தல், புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகளை அமைத்தல் ஆகிய பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் 272 கோடியே 53 லட்சம் ரூபாய் செலவில் (மாநில நெடுஞ் சாலை எண் 15) (கி.மீ 123153/6) 30.60 கி.மீ நீளத்திற்கு நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தப்பட்ட கோபி ஈரோடு சாலை; மயிலாடுதுறை, திருவாரூர் மாவட்டங்களில் 221 கோடியே 4 லட்சம் ரூபாய் செலவில் 10 மீ அகல இருவழிச்சாலையாக (மாநில நெடுஞ்சாலை 231) (கி.மீ 4/5 20/925) 16.425 கி.மீ நீளத்திற்கு தரம் உயர்த்தப்பட்ட மயிலாடுதுறை ரூ திருவாரூர் சாலை; தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் 197 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில் 10 மீ அகல இருவழிச்சாலையாக (மாநில நெடுஞ்சாலை ரூ66) (கி.மீ. 3/6 8/6) 5.0 கி.மீ நீளத்திற்கும் மற்றும் (கி.மீ 13/9கி.மீ 23/8) 9.90 கி.மீ நீளத்திற்கும் தரம் உயர்த்தப்பட்ட கும்பகோணம் மன்னார்குடி சாலை; திருவள்ளூர் மாவட்டத்தில் 111 கோடி ரூபாய் செலவில் (கி.மீ. 7/018/4) 11.40 கி.மீ நீளத்திற்கு இரு வழிப்பாதையிலிருந்து நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட கொரட்டூர் திின்னனூர் பெரியபாளையம் சாலை மற்றும் 82 கோடி ரூபாய் செலவில் (கி.மீ.7/016/2) 9.20 கி.மீ நீளத்திற்கு இரு வழிச்சாலையிலிருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட திருவள்ளூர் அரக்கோணம் சாலை; திருநெல்வேலி மாவட்டத்தில் 65 கோடியே 99 லட்சம் ரூபாய் செலவில் (கி.மீ 0/06/049) 6.049 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்ட அம்பாசமுத்திரம் புறவழிச் சாலை; முதல் அமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அரியலூர் மாவட்டத்தில் 60 கோடி ரூபாய் செலவில் (கி.மீ 6/814/8) 8.0 கி.மீ நீளத்திற்கும், 62 கோடி ரூபாய் செலவில் (கி.மீ. 14/821/0) 6.20 கி.மீ நீளத்திற்கும் மற்றும் 63 கோடி ரூபாய் செலவில் (கி.மீ. 21/027/6)6.60 கி.மீ நீளத்திற்கும் (மாநில நெடுஞ்சாலை140) இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட விருத்தாசலம் ஜெயங்கொண்டம் மதனத்தூர் சாலை; மதுரை மாவட்டத்தில் 41 கோடியே 89 லட்சம் ரூபாய் செலவில் திருப்பரங்குன்றம், மதுரை திருமங்கலம் சாலைப்பகுதி (மாநில நெடுஞ்சாலை நகர்பகுதி எண்.101); கி.மீ.2/550 3/750ல் வலதுபுறத்தில் உள்ள தென்கால் கண்மாய் கரைவழியாக 1.20 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்ட இருவழிச்சாலை; வேலூர் மாவட்டத்தில் 35 கோடியே 99 லட்சம் ரூபாய் செலவில் கூடநகரம் அனங்காநல்லூர் சாலையில் கி.மீ 3/0ல் ரெயில்வே கி.மீ. 160/24ல் உள்ள கடவு எண்.67க்கு மாற்றாக மேலாலத்தூர் வளத்தூர் ரெயில் நிலையங்களுக்கிடையே கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம்; லட்சுமி அம்மாள்புரம் நாவிதம்பட்டி சாலையில் கி.மீ 0/2ல் ரெயில்வே கி.மீ. 168/1214ல் உள்ள கடவு எண்.72க்கு மாற்றாக மேல்பட்டி வளத்தூர் ரெயில் நிலையங்களுக்கிடையே 35 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம்; என மொத்தம் 1248 கோடியே 24 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 10 சாலைகள் மற்றும் இரு சாலை மேம்பாலங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதல்அமைச்சர் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்." இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. ",

## துரோக செயலுக்கு எடப்பாடி பழனிசாமிக்கு நோபல் பரிசு கொடுக்கலாம்...

### * கோபி செய்தியாளர்கள் சந்திப்பில் செங்கோட்டையன் விலாசல்...

### * உண்மைக்கும் விசுவாசத்திற்கும் கிடைத்த பரிசா..? என வேதனை ..



ஈரோடு நவ.02

உண்மைக்கும், விசுவாசத்திற்கும் கிடைத்த பரிசு இது என்று செய்தியாளர்கள் சந்திப்பில் செங்கோட்டையன் வேதனையோடு தெரிவித்தார். துரோகத்திற்கு பரிசு கொடுப்பதாக இருந்தால் எடப்பாடி பழனிசாமிக்கு நோபல் பரிசு கொடுக்கலாம் என ஆவேசம் காட்டினார்.

அதிமுகவில் மூத்த தலைவராக இருந்து வந்தவர் ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம், அருகே உள்ள குள்ளம்பாளையம் என்ற பகுதியை சேர்ந்தவர் கே .ஏ செங்கோட்டையன்.

1972 ஆம் ஆண்டு எம் ஜி ஆர் அதிமுகவை தொடங்கியது முதல் அக்கச்சியில் பல்வேறு பொறுப்புகளிலும் மற்றும் எம் ஜி ஆர், ஜெயலலிதா ஆகியோரின் அமைச்சரவையில் மூத்த அமைச்சராகவும் பொறுப்புகள் வகித்து வந்தவர் இந்த செங்கோட்டையன்.

எம்ஜிஆர் மறைவுக்கு பிறகு , ஜெயலலிதாவின் தலைமையை ஏற்று அவருக்கு ஒரு தேர்தல் பிரச்சார தளபதியாக இருந்து வந்தவர். அதன் பின்னர் எடப்பாடி பழனிசாமியுடன் இணைந்து பயணிக்கும் நிலை வந்த போது, எடப்பாடி பழனிசாமிக்கும் செங்கோட்டை எனக்கும் இடையே கருத்து மோதல்கள் அடிக்கடி வந்துள்ளது.

இந்த நிலையில் கடந்த செப்டம்பர் 5ஆம் தேதி கோபிசெட்டிபாளையத்தில் செய்தியாளர்களை சந்தித்த செங்கோட்டையன் பிரிந்து சென்றவர்கள் ஒன்று சேர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து, கட்சி தலைமைக்கு பத்து நாள் கெடு விதி சேர்ந்தார்.

இதன் காரணமாக அவரின் கட்சி பொறுப்புகள் அனைத்தையும், கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வைத்தார்.

இந்த நிலையில் சில தினங்களுக்கு முன்பு பசும்பொன்னில் நடைபெற்ற தேவர் ஜெயந்தி விழாவில், சசிகலா, டிடிவி தினகரன், ஓபிஎஸ் ஆகியோரை நேரில் சந்தித்து செங்கோட்டையன் பேசி உள்ளார்.

இதனால் கோபம் அடைந்த எடப்பாடி பழனிசாமி அவரை நேற்று முன்தினம் மாலை அதிமுகவின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்கினார்.

இதனைத் தொடர்ந்து நேற்று காலை கோபிசெட்டிபாளையத்தில் உள்ள தனது பண்ணை வீட்டில் செங்கோட்டையன் செய்தியாளர்களை சந்தித்து தன்னுடைய தன்னில விளக்கத்தை தெரிவித்தார்.

அப்பொழுது செங்கோட்டையன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

நான் எம்ஜிஆர் அதிமுகவை உருவாக்கிய போதே அந்த கட்சியில் சேர்ந்தவன். 1972 ஆம் ஆண்டு நான் அதிமுகவில் சேர்ந்து எம்ஜிஆர் ஓட இணைந்து கட்சியில் பணியாற்ற தொடங்கினேன். ஆனால் எடப்பாடி பழனிசாமி 1989 ஆம் ஆண்டு தான் கட்சிக்கே வந்தார். அவரைவிட நான் பல மடங்கு கட்சியில் சீனியர்.

எம்ஜிஆர் கட்சியை தொடங்கியவுடன், கோவையில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தை நடத்த என்னையும் அரங்கநாயகன் மற்றும் திருப்பூர் மணிமாறன் ஆகியோர் பொதுக்குழுவை நடத்த சொன்னார்.

அன்று முதல் எம்ஜிஆரின் நம்பிக்கைக்கு உரியவனாக இருந்து வருகிறேன்.

அவரின் மறைவுக்குப் பிறகு ஜெயலலிதா அவர்களின் தலைமையை ஏற்று கட்சியில் பல்வேறு சங்கடங்கள் வந்த போதும் கட்சிக்கு உண்மை விசுவாச தொண்டனாக பணியாற்றி வந்துள்ளேன்.

இந்த நிலையில் கூவத்தூரில் எடப்பாடி பழனிசாமி முதலமைச்சர் வேட்பாளர் என்ற அறிவிப்பை அங்கு படித்து அறிவித்தவன் நான்தான்.

அதன் பிறகு பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியுடன் இணைந்து அதிமுகவிற்காகவும் அதிமுக தொண்டர்களுக்காகவும் அமைதியான முறையில் பணியாற்றி வந்தேன்.

இருந்த போதிலும் எடப்பாடி பழனிசாமியின் சர்வாதிகார போக்கால் மனம் வேதனை அடைந்தேன். தொடர்ந்து அதிமுகவை வெற்றி தெரிந்தவர்களை ஒன்று சேர்க்க வேண்டும் என நாங்கள் ஒரு ஆறு பேர் அவரை சந்தித்து பேசினோம். அதனை ஏற்றுக் கொள்ளாத அவர் பின்னர் ஒரு செய்தியாளர் சந்திப்பில் அப்படி ஒரு சந்திப்பை நடக்கவில்லை என பச்ச பொய்யை பகிரமாக தெரிவித்தார். அன்றைய தினம் முழு அளவில் எனது மனம் உடைந்து விட்டது.

அதன் பிறகு கட்சியின் வளர்ச்சிக்காகவும் தொண்டர்களின் நலனுக்காகவும் அமைதி காத்து வந்தேன்.

அந்தியூர் தொகுதியைப் பொறுத்தவரை என்னால் தோற்றதாக சொல்கிறார் , தோற்றது எடப்பாடி பழனிசாமியின் ஈகோவால் தான்.

அதேநேரம் ஜெயலலிதா அவர்கள் ஒரு தேர்தலில் தோற்று விட்டால், மறு தேர்தலில் வரலாற்று வெற்றியை படைப்பார்.

ஆனால் இன்றைய நிலை என்ன, எடப்பாடி பழனிசாமி பொதுச்செயலாளராக வந்து கட்சியை தலைமை தாங்கி வழிநடத்தி செல்லும் நிலையில், தமிழ்நாட்டில் நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் அதிமுக தோல்வி அடைந்தது. இதன் காரணமாக இரண்டாம் கட்ட தலைவர்கள் மட்டும் தொண்டர்கள் மிகுந்த மன வேதனை அடைந்து, சோர்வு அடைந்தனர்..

இதையெல்லாம் மனதில் வைத்துதான் இணைந்த அவர்களை ஒன்று கூட்டினால் தான் திமுக ஆட்சியை அப்புறப்படுத்த முடியும், அதிமுக ஆட்சியை கொண்டுவர முடியும் என்று நான் தெரிவித்தேன். அதனை அவர் வசதிக்காக மாற்றி திரித்து பழியை என் மேலே போட்டுவிட்டார்.

அதிமுகவை பொறுத்தவரை அக்கட்சியின் நிறுவனத் தலைவராக இருந்து மறைந்த எம்ஜிஆர் அவர்கள் கொண்டு வந்த அதிமுக கட்சியின் சட்ட விதிகளையே எடப்பாடி பழனிசாமி மாற்றி அமைத்து உள்ளார்.

அந்த அதிகாரத்தை அவருக்கு யார் கொடுத்தது. மேலும் என்னை கட்சியை விட்டு நீக்குவதற்கு எடப்பாடி பழனிசாமிக்கு எந்த ஒரு அதிகாரமும் இல்லை. தற்போது அவர் கட்சியின் தற்காலிக பொது செயலாளராகத்தான் இருந்து வருகிறார்.

அதிமுகவை விட்டு நான் விலக மாட்டேன். என்றைக்கும் அதிமுக தொண்டனாக இருந்து, தொண்டர்களுக்கு உறுதுணையாக இருப்பேன்.

ஜெயலலிதா அவர்கள் எனக்குப் பின்னாலும் நூறாண்டு காலம் அதிமுக வெற்றி பெறும் என்று சொன்னார்கள். ஆனால் எடப்பாடி பழனிசாமி பொதுச்செயலாளராக பொறுப்பேற்ற நாளிலிருந்து அனைத்து தேர்தல்களிலும் கட்சியை தோல்வி பாதைக்கு அழைத்து சென்றுவிட்டார்.

என்னை நீக்கியது செல்லாது என்று வழக்கறிஞர்கள் மூலம் சட்ட விதிகளை முன்வைத்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வேன்.

என்னை திமுகவின் வீட்டின் என்று சொல்கிறார் எடப்பாடி பழனிசாமி. உண்மையிலேயே அவர்தான் ஏ1 டீம் ஆக திமுகவில் உள்ளார். கொடைநாடு விவகாரம் இதற்கு சாட்சியாக உள்ளது.

நான் உயிராக மதித்த அதிமுக விட்டு என்னை நீக்கியது, எனக்கு மிகுந்த மனவேதனையும் வருத்தத்தையும் தருகிறது. இரவு முழுவதும் தூங்காமல் இருந்து கண்ணீர் விட்டு அழுது விட்டேன்.

துரோகத்திற்கான நோபல் பரிசு தருவதாக இருந்தால் அதனை எடப்பாடி பழனிசாமிக்கு தாராளமாக தரலாம்.

53 ஆண்டு காலம் அதிமுகவிற்காக உழைத்த என்னை எடப்பாடி போன்ற துரோகிகள் கட்சியை விட்டு வெளியேற்ற முடியாது.

அதிமுகவின் கட்சி விதிகளை மேற்கோள் காட்டி சட்ட நடவடிக்கையில் ஈடுபடுவேன்.

இவ்வாறு கோபிசெட்டிபாளையத்தில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில், அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் கே.ஏ செங்கோட்டையன் தெரிவித்தார்.

# தேர்தல் "சிறப்பு தீவிர திருத்தம்" உள்நோக்கம் நிறைந்தவை. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சேபனை.



மணப்பாறை, நவ. 2–
மணப்பாறை தாலுகா அலுவலகத்தில் தேர்தல் ஆணைய சிறப்பு கூட்டத்திற்கு மாவட்ட பிற்படுத்த பட்டோர் நல அலுவலர் மற்றும் சிறுபான்மையினர் அலுவலர் ஜெய சித்தரா காலா தலைமை வகித்தார் தாசில்தார் சுந்தர பாண்டியன் தேர்தல் அலுவலர் வேள்ளச்சாமி முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் திமுக ஒன்றிய செயலாளர் ராமசாமி அதிமுக நகர செயலாளர் பவுன் ராம்மூர்த்தி சிபிஎம் புறநகர் மாவட்ட செயர் குழு உறுப்பினர் சிதம் பரம் காங்கிரஸ் மாவட்ட நிர்வாகி முருகன் விடுதலை சிறுத்தைகள் தெற்கு மாவட்ட செயலாளர் சக்தி உட்பட அனைத்து கட்சி கலந்து கொண்ட சிறப்பு வாக் காளர் பட்டியல் திருத்த கூட்டம் நடைபெற்றது

இக்கூட்டதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக " சிறப்பு தீவிரத் திருத்தம்" தற்போது அவசர நிலையில் தேவையில்லை மேலும் அதன் சரத்துக்கள் உள் நோக்கம் நிறைந்தவையாக வுள்ளது என்று ஆட்சேபனை தெரிவித்து கடிதம் கொடுக்கப்பட்டது அந்த கடிதத்தை விளக்கி பேசிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில நிர்வாக குழு உறுப்பினர் த. இந்திரஜித் பேசும்போது;

அரசியல் அமைப்பு சட்டப்படி தேர்தல் ஆணையம் சுதந்திர அமைப்பாக செயல்பட்டு வந்த நிலையில் 1952 தேர்தலுக்கு பிறகு பல நல்ல சீர்திருத்தங்களை செய்து வந்திருக்கிறது சமீபகாலமாக ஒன்றிய அரசின் சார்பு அமைப் பாக செயல்படுவதாக பலத்த சந்தேகம் எழுந்துள்ளது,

தமிழ்நாட்டில் 2026 இல் தேர்தல் நடைபெறுகின்ற இந்த நேரத்தில் இது தேவையில்லை ஏற்கனவே இந்த சிறப்பு தேர்தல் சிறப்பு திருத்தம் மூலமாக பீகாரில் உண்மையான வாக்காளர்கள் ஏறத்தாழ 62 லட்சம் பேர் நீக்கப் பட்டு அவர்கள் உயி ரோடு இருப்பது தெரிய வந்து எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்திருக் கின்ற நிலையில் பல வழக்குகள் உச்ச நீதிமன்றத்திலும் பல நீதிமன்றங்களிலும் நிலுவையில் இருக்கும் நேரத்தில் அதுவும தேர்தல் நடைபெறுகின்ற மாநிலங்களில் தமிழ்நாடு ,கேரளா ,மேற்குவங்கம் போன்ற மாநிலங்களில் மட்டும் இந்த நடவடிக் கையை அவசர அவசர மாக செய்வது ஏன்?

இந்த சீர்திருத்தம் என்பது திட்டமிட்ட செயல் ஏற்கனவே இருந்த ஆவணங்களை நீக்கிவிட்டு புதிய ஆவணங்களை கூறியிருக் கிறீர்கள் குறிப்பாக ஆதாரை கூட ஒரு ஆவணமாக குறிப்பிட வில்லை . நீதிமன்றங்கள் ஆதார் ஏற்க வேண்டும் என்று சொல்லப்பட்ட பிறகு அது பரிசீலனையில் உள்ளது மீதம் உள்ள ஆவனங்களில் விவசாயிகள்,விவசாய தொழிலாளர்களுக்கான ஆவனம் இல்லை, அதற்கு இருப்பிட சான்று வாங்கி கொடுக்கலாம் என்று இருக்கிறது,

இருப்பிட சான்று அவ்வளவு எளிதாக கிடைக்காது பிப்ரவரி மாதத்திற்குள் வாக்காளர் பட்டியலை வெளியிடப் போகிறோம் என்று சொல்லுகின்ற இந்த நேரத்தில் இருக்கின்ற இரண்டு மூன்று மாதங்களில்

தமிழ்நாட்டில் இருக் கின்ற வாக்காளர்கள் கண்டறிந்து அவ்வளவு பேருக்கும் இந்த சிறப்பு தேர்தல் திருத்தத்தை இப்பொழுது நடத்தி முடிக்க முடியாது,

வெளி மாநிலத்தில் இருக்கக்கூடிய பல வாக்காளர்களை உதாரணத்துக்கு மணப்பாறையில் 8000 மேற்பட்டோர் இருக் கிறார்கள் அவர்களை யெல்லாம் மத்திய அரசினுடைய எந்த ஆவணத்தையாவது பயன்படுத்தி வாக்காளர்களாக இங்கு இறக்குமதி செய்வதற் கான தந்திரம் இதில் இருக்கிறது குறிப்பாக போஸ்டல் கார்டு அட்ரஸ் இருந்தால் கூட சேர்த்துக் கொள்ளலாம் என்று இருக்கின்றது எனவே அதை பயன்படுத்தி அவர்களை வாக்காளர் ஆக்குவதற் கான முயற்சி நடக்கலாம் தேர்தல்ல ஏதோ ஒரு மோசடி நடப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது

அதுமட்டுமல்ல சிறப்பு தீவிர திருத்தம் குறித்து வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், பாராளுமன்றத்தில் விவாதம் நிறைவு பெறாத நிலையில், எதிர்க்கட்சிகள் பல திருத்தங்களை முன்மொழிந்துள்ள நிலையில்

அவசர ,அவசரமாக தமிழ்நாட்டில் ஒன்றிய அரசு அமல்படுத்துவதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சேபிக்கிறது , திருத்தங்களை ஏற்கும் வரை அல்லது அந்த திருத்தங்கள் மீது முடிவெடுக்கின்ற வரை இதை நிறுத்தி வைக்க வேண்டுமாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக கேட்டுக் கொள்கிறோம் என்று பேசினார் அவருடன் திருச்சி புறநகர் மாவட்ட பொருளாளர் ஜனசக்தி உசேன் ஏஐடியூசி மாவட்ட செயலாளர் சுப்ரமணியன் ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் மாவட்ட குழு உறுப்பினர் தங்கராசு வையம்பட்டி ஒன்றிய துணைச் செயலாளர் ஆரோக்கியம் மருங்காபுரி ஒன்றிய துணைச் செயலாளர் கோவிந்தராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்



திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தாட்கோ சார்பில் நடைபெற்ற தூய்மைப் பணியாளர்களுக்கான குறைகேட்பு கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் தூய்மைப் பணியாளர் நலவாரியத்தில் பதிவு பெற்ற தூய்மைப் பணியளர்களுக்கு நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டையினை வழங்கினார்கள்.

# திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 4ந்தேதி உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெறவுள்ளது

திருச்சி. நவ.2–
திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் பொது மக்கள் தங்களுடைய கோரிக்கை மனுக்களை அளித்து தீர்வு காணும் வகையில் 04 இடங்களில் முகாம்கள் நடைபெற்றது. இம் முகாம்களின் வாயிலாக நகர்புறத்திற்கு 13 துறைகள் மூலமாக 43 சேவைகளும், ஊரகத்திற்கு 15 துறைகள் மூலமாக 46 சேவைகளும் வழங்க ப்படும் வகையில் இம் முகாம்கள் நடைபெற்று வருகிறது. அதன்படி திருச்சிராப் பள்ளி மாவட்டத்தில் (31.10.2025) 04 இடங்களில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து 1424 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

(31.10.2025) உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம் 1 வார்டு எண்: 21 பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மேலப்புலிவார்ரோடு ரத்தினவேல் தேவா; மஹாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் 812 கோரிக்கை மனுக்களும், மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம், கே.கள்ளிக்குடி ஊராட்சியில் உள்ள பொதுமக்கள் பயன் பெறும் வகையில் கே. கள்ளிக்குடி சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் 237 கோரிக்கை மனுக்களும், மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், பிச்சாண்டார்கோவில் ஊராட்சியில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நெ1டோல்கேட் அலங்கார அன்னை திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் 206 கோரிக்கை மனுக்களும், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம், கீழமுல்லைக் கொடி ஊராட்சியில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கீழமுல்லைக்கொடி வி.பி.ஆர்.சி கட்டிட மையத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் 169 கோரிக்கை மனுக்களும் என மொத்தம் 1424 கோரிக்கை மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் திருச்சிராப் பள்ளி மாநகராட்சி மண்டலம் 1 வார்டு எண்: 21 பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மேலப்புலிவார்ரோடு ரத்தினவேல் தேவா; மஹாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் பதிவேற்றம் செய்வதையும் முகாமின் செயல்பாடுகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களுடன் கலந் துரையாடி பயனாளி களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும், வருகின்ற (04.11.2025) அன்று உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி ஊராட்சி ஒன்றியம், ஆதிகுடி ஊராட்சி பகுதியில் உள்ள பொது மக்கள் பயன்பெறும் வகையில் ஜெங்கமராஜ புரம் சத்யா மஹாலிலும், துறையூர் ஊராட்சி ஒன்றியம், கோவிந்தாபுரம் ஊராட்சி பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ரெங்கநாதபுரம் ரெட்டியார் திருமண மஹாலிலும், முசிறி ஊராட்சி ஒன்றியம், அய்யம்பாளையம் ஊராட்சி பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஏவூர்; ஊராட்சி லட்சுமி திருமண மண்டபத்திலும், மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், கருப்பூர் வார்டு எண்: 1,2,7,8,9,10 ஊராட்சி பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கருப்பூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி பிள்ளையார் கோவில் வளாகத்திலும் நடைபெறவுள்ளது. பொதுமக்கள் அனைவரும் இம்முகாமினை பயன்படுத்தி தங்களுடைய கோரிக்கை மனுக்களை அளித்து தீர்வு காணலாம் என தெரிவிக்கப்படுகிறது.

# பாஜக சுற்றுச்சூழல் பிரிவு மாநிலத் தலைவர் கோபிநாத் சேலம் ஆட்சியர் அலுவலத்தில் அளித்த புகார் மனு.

## * சேலத்தில் ஜெப பாடலை கூற மறுத்த மாணவிக்கு தண்டனை.

## * ஆசிரியை பணியிடை நீக்கம்.



சேலம். நவ.2–
ஜெப பாடலை கூற மறுத்த மாணவிக்கு தண்டனை அளித்த அரசு உதவிபெறும் பள்ளியின் ஆசிரியரை பணியிடை நீக்கம் செய்து பள்ளி நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னதாக, பாஜக சுற்றுச்சூழல் பிரிவு மாநிலத் தலைவர் கோபிநாத் சேலம் ஆட்சியர் அலுவலத்தில் அளித்த புகார் மனு:

சேலம், நெத்திமேட்டில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளியில் இயேசு, மேரிமாதா குறித்த ஜெப பாடல்களை மாணவியர் பாட வேண்டும் என ஆங்கில ஆசிரியை புதன்கிழமை கூறியுள்ளார். அதில், ஒரு மாணவி பாட விருப்பமில்லை என தெரிவித்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த அந்த ஆசிரியை சம்பந்தப்பட்ட மாணவியை 5 பாடவேளைகள் நிற்கவைத்துள்ளார். மேலும், மாணவியை மிரட்டியதால், பெற்றோர் அச்சமடைந்துள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட ஆசிரியை மீது பள்ளி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறினால், இந்து மாணவர்களின் உரிமையை மீட்க பாஜக போராட்டத்தை முன்னெடுக்கும் என எச்சரித்திருந்தார்.

இந்நிலையில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கபீர் உத்தரவின் பேரில், ஆங்கில ஆசிரியை ஜெயரோஸை பணியிடை நீக்கம் செய்து பள்ளித் தாளாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

# யார் இந்த செங்கோட்டையன்?

பிறப்பு 1948: ஈரோடு மாவட்டம் குள்ளம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்தவர்.

1971ம் ஆண்டு வரை திமுகவில் பயணித்த செங்கோட்டையன், 1972ல் எம்.ஜி.ஆர் தலைமையிலான அதிமுகவில் இணைந்தார்.

1975 கோவையில் நடைபெற்ற பொதுக்குழுவை சிறப்பாக நடத்தியதால் எம்.ஜி.ஆரிடம் நற்பெயரைப் பெற்று கவனம் ஈர்த்தார்

1977 எம்ஜிஆரின் முதல் ஆட்சிகாலத்தில்



சத்தியமங்கலம் தொகுதியில் போட்டியிட்டு எம். எல்.ஏவாக வெற்றி பெற்றார்

1980ம் ஆண்டு முதல் கோபிசெட்டிப்பாளையத்தில் தொடர்ந்து போட்டியிட்டு 9 முறை வெற்றி பெற்றுள்ளார். 1996 தேர்தலில் மட்டும் தோல்வி

1989 ஜெ.அணி.. ஜ.அணி என்ற பிளவில் ஜெயலலிதா அணியில் சேவல் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்

(1991 1996) போக்குவரத்துத்துறை அமைச்சராகவும், (2011 2016)ல் விவசாயம், மிஜி, வருவாய் துறை அமைச்சராகவும் பொறுப்பு..

2016 2021 பழனிசாமியின் அமைச்சரவையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சராக பொறுப்பு

எம்ஜிஆர் உடன் பிரச்சாரத்திற்கு செல்வது, ஜெயலலிதா பயண திட்டங்களை வகுப்பது என்று முக்கிய முகமாக இருந்திருக்கிறார்

கருணாநிதி, துரைமுருகன் வரிசையில், அதிக முறை சட்டமன்ற உறுப்பினரானவர் செங்கோட்டையன்

அதிமுகவில் சூப்பர் சீனியராக இருந்த இவர், பொதுச்செயலாளர் எடப்பாடிக்கும் சீனியர்.

# ஸ்ரீசெல்வகணபதி மக்கள் சேவை அறக்கட்டளை நிறுவனத்தலைவர் வி.கே.பிரகாஷ் பிறந்த நாளையொட்டி கேக் வெட்டி கொண்டாட்டம்




சேலம், நவ:2
சேலம் பச்சப்பட்டி மெயின் ரோடு, துவக்கப்பள்ளி அருகில், 40 வது டிவிஷனில் ஸ்ரீசெல்வகணபதி மக்கள் சேவை அறக்கட்டளை அலுவலகத்தில் அதன் நிறுவனத் தலைவர் வி.கே.பிரகாஷ் பெண் களுக்கு இலவசமாக தையல் பயிற்சி வழங்கி வருகிறார். அறக் கட்டளை நிறுவனத் தலைவர் வி.கே.பிரகாஷ் க்கு நேற்று (சனிக்கிழமை) 42 ஆவது பிறந்த நாள் மற்றும் அவரது மகன் எஸ்.பி.ஷாம் க்கு 13 ஆவது பிறந்த நாள் ஆகும். அதனையொட்டி நேற்று காலை அறக்கட்டளை தையல் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெறும் பெண்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பிரகாஷ் மற்றும் ஷாம் பிறந்த நாளையொட்டி கேக் வெட்டி கொண்டாடி அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண் டனர். தொடர்ந்து அப்பகுதி மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

இதில் அறக்கட்டளை செயலாளர் பி.சிந்துஜா, பிரகாஷ் குழந்தைகள் எஸ்.பி.சஞ்சனா, எஸ்.பி.சிபி, பொருளாளர் ஏ.விஜய், உறுப்பினர்கள் மற்றும் பச்சப்பட்டி பகுதி முதியோர், பெண்கள், சிறுவர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் அருகே தாய் தந்தையை இழந்த 19 வயது இளம் பெண் 40 பி.ப்பி மாத்திரைகளை சாப்பிட்டு தற்கொலை : போலீசார் விசாரணை

திருவள்ளூர் நவ 02 :
திருவள்ளூர் அடுத்த நயப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர் அருண்குமார். (23). இவரின் தாய், தந்தை இருவரும் சிறு வயது இருக்கும் போதே இறந்து விட்டனர். இதனால் அருண்குமாரும், தங்கை பாரதி (19) யும் பாட்டி வீட்டில் வசித்து வந்துள்ளனர்.இதில் பாரதி பெற்றோர் இல்லாத ஏக்கத்தில் இருந்தவரை அண்ணன் அருண்குமார் சமாதானப்படுத்தி வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் மன குழப்பத்தில் இருந்த பாரதி கடந்த 28ஆம் தேதி இரவு வீட்டில் வாந்தி எடுத்துள்ளார். இதுகுறித்து அண்ணன் அருண்குமார் கேட்டபோது வீட்டில் இருந்த 40 பி.ப்பி மாத்திரைகளை சாப்பிட்டதாக கூறியுள்ளார். இதனையடுத்து தண்டலம் சவீதா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளார்.

ஆனால் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.தாய் தந்தை இல்லாத ஏக்கத்தில் 19 வயது இளம் பெண் 40 பி.ப்பி மாத்திரைகளை சாப்பிட்டு உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து மணவாளநகர் போலீசில் அருண்குமார் புகார் கொடுத்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சாலையை சீரமைத்துத்தர வேண்டி பொதுமக்கள் கோரிக்கை.



திருச்சி மாவட்டம் மருங்காபுரி தாலுகா துவரங்குறிச்சிநத்தம் தேசிய நெடுஞ்சாலை பிரிவிலிருந்து எம்.இடையபட்டி, வடகம்பட்டி,தெத்தூர் வரை சுமார் 5 கி.மீட்டருக்கு மேல் சாலையில் ஜல்லிகள் பரப்பப்பட்டு நீண்ட நாட்களாகியும் சரிசெய்யப்படாமல் சாலை முற்றுப்பெறாமல் உள்ளது. ஆகையாயால் இந்த கரடுமுரடான சாலையை கடந்து செல்லும் பொதுமக்கள் துவரங்குறிச்சி செல்ல இந்த கரடுமுரடான சாலையைக் கடந்து தான் செல்ல வேண்டும்.இருசக்கர வாகனத்தில் செல்லக் கூடியவர்கள் மிகவும் சிரமத்துக்குள்ளகின்றனர்.ஆகவே இந்த கரடுமுரடான சாலையை சீரமைத்து தார் சாலை அமைத்துத்தர வேண்டி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




திருச்சிராப்பள்ளி மாவட்டம் வையம்பட்டி ஒன்றியம் பழைய கோட்டை ஊராட்சி ரெட்டியபட்டியில் நேற்று கிராம சபை கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் மணப்பாறை வருவாய் வட்டாட்சியர்,வையம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர், வீ.பெரியப்பட்டி வருவாய் ஆய்வாளர், பழைய கோட்டை கிராம நிர்வாக அலுவலர், இனாம் ரெட்டியப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.இக்கூட்டத்தில் தேர்தல் சிறப்பு வாக்காளர் திருத்தம் குறித்தும் பொது மக்கள் நன்கு அறியும் வண்ணம் விரிவாக வருவாய் வட்டாட்சியர் எடுத்துரைத்தார்.

# மணப்பாறை அருகே மாமுண்டி ஆற்றின் குறுக்கே ரூ.5.27 கோடியில் புதிதாக மேம்பாலம். அடிக்கல் நாட்டி பணிகள் துவக்கம்.

## மழைகாலங்களில் தரைப்பாலத்தில் தண்ணீரில் தத்தளித்த 25 கிராமமக்கள் நிம்மதிப்பெருமூச்சு.

### ஜெ. ஆட்சியில் 110 விதியின் கீழ் அறிவித்தும் நிறைவேற்றாததை தற்போது நிறைவேற்றித் தந்த தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கும் மக்கள்.




திருச்சி. நவ.2–

திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே சமுத்திரம் செல்லும் வழியில் மாமுண்டி ஆறு உள்ளது. சமுத்திரம் மட்டுமல்லாது காந்தி நகர், சின்ன சமுத்திரம், சித்தகுடிப்பட்டி, பொருவாய், தாதநாயக்கன் பட்டி, ஜேபி நகர், மருள் நாயக்கன்பட்டி உள்ளிட்ட 25 க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்தவர்கள் இந்த ஆற்றின் குறுக்கே செல்லும் தரைப்பாலம் வழியாகச் செல்ல வேண்டும். மேலும் கரூர் மாவட்டம், குளித்தலை மற்றும் தோகைமலைப் பகுதியை சேர்ந்தவர்கள் புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை பகுதியில் உள்ள தொழிற்சாலைகளுக்குச் செல்லும் பிரதான சாலையாகவும் இது உள்ளதால் போக்குவரத்து நிறைந்த பகுதியாகும். இந்நிலையில் மழைகாலங்களில் மணப்பாறை பகுதியில் பெய்யும் மழையால் நீர்நிலைகள் நிரம்பி மாமுண்டி ஆற்றில் வெள்ளநீர் செல்லும் காலங்களில் சமுத்திரம் பகுதியில் மாமுண்டி ஆற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலத்தை கடந்தும் நீர் செல்லும் நிலையில் பள்ளி மற்றும் கல்லூரிக்கு செல்லும் மாணவ, மாணவிகள், விவசாயிகள், விராலிமலை தொழிற்சாலைகளுக்கு வேலைக்கு செல்லும் தொழிலாளர்கள், அவசர தேவைக்கு செல்வோர் என பல ஆயிரத்திற்கும் அதிகமாக மக்கள் ஆபத்தின் உச்சம் என தெரிந்தும் வேறு வழியின்றி அதிவேகமாக செல்லும் நீரில் உயிரை பணயம் வைத்து அபாயகரமான முறையில் கடந்து செல்ல வேண்டிய நிர்பந்த சூழ்நிலைக்கும் அல்லது 7 கிலோமீட்டர் சுற்றிச் செல்ல வேண்டிய நிலைக்கும் தள்ளப்படுகின்றனர். இப்பகுதியில் பாலம் அமைத்து தந்திடவேண்டும் என்ற கோரிக்கை நீண்டபல ஆண்டுகளாகவே நீடித்தாலும் அது கோரிக்கையாகவே இருந்து வந்தது. மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்று முதல்வராக இருந்தபோது தனது தொகுதிக்குட்பட்ட சமுத்திரத்தில் உள்ள மாமுண்டி ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட 110 விதியின் கீழ் சட்டமன்றத்தில் அறிவித்தும் பாலம்கட்டப்படவில்லை.

இந்நிலையில் கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் சமுத்திரத்தில் மேம்பாலம் கட்டப்படும் என திமுக வாக்குறுதி அளித்த நிலையில் தற்போது சமுத்திரத்தில் மேம்பாலம் கட்டுவதற்கு ரூ. 5.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் துவங்குவதற்கான அடிக்கல் நாட்டும் விழா இன்று நடைபெற்றது. ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் பழனியாண்டி அடிக்கல் நாட்டி பணியினை துவக்கி வைத்தார். விழாவின் போது சமுத்திரம் மற்றும் அதனைச்சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான கிராமமக்கள் திரண்டு வந்து சட்டமன்ற உறுப்பினருக்கு சால்வை அணிவித்து தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியதற்கு நன்றி தெரிவித்தனர். சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக நாங்கள் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் தற்போது திமுக அரசால்தான் தங்களது கோரிக்கை நிறைவேறிதாகக்கூறி தமிழக அரசுக்கும், முதல்வருக்கும், ஸ்ரீரங்கம் சட்டமன்றஉறுப்பினருக்கும் நன்றி தெரிவித்தனர்.

# போளூர் வட்டகிளை தமிழ் நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் வட்டசெயற்குழு கூட்டம்.




தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க வட்ட செயற்குழு கூட்டம் போளூர் சங்க கட்டிடத்தில் 1.11.25 அன்று காலை 10.30மணியளவில் வட்ட தலைவர் க. அபிபுல்லாகான் தலைமையில் நடைபெற்றது.

வட்ட துணை தலைவர் மணி வரவேற்புரையாற்றினார். வட்ட இணை செயலாளர் சந்திரசேகர் அஞ்சலி தீர்மானம் வாசித்தார், வட்ட தலைவர் க. அபிபுல்லாகான் கடந்தகால நடவடிக்கைகளை விளக்கி பேசினார்.வட்ட பொருளாளர் இராமலிங்கம். ஷ் நிதிநிலைமை குறித்து வாசித்தார்.வட்டசெயலாளர் பாலு மாநாடு பற்றி பேசினார்.

மாவட்ட தலைவர் ப. கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட பொருளாளர் அ. ஆனந்தன்மாநாடு நிகழ்வு, 11.11.25 வட்டதலைநகர் ஆர்ப்பாட்டம் பற்றி விளக்கி பேசினார்கள்.சரவணன் மா. இ. செயலாளர் சங்க நடவடிக்கைகள் தெளிவுபடுத்தி பேசினார்.

மாநாடு நிகழ்ச்சி 11.11.25 ஆர்ப்பாட்டம் பற்றி ஆலோசனைகள், கருத்துக்களை பன்னீர்செல்வம், மணி, கந்தசாமி, ஏழுமலை, புருஷோத்தமன், குப்புசாமி, மோகன், இராமகிருஷ்ணன், அண்ணாமலை, குப்பாஸ், தண்டபாணி, சேகர், தெரிவித்தார்கள். மாவட்ட செயற்குழு உறுப்பினர் பரசுராமன் தேர்வு செய்யப்பட்டார். நன்றியுரை இராமலிங்கம் வட்டபொருளாளர்.

# உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், திண்டமங்கலம் ஊராட்சியில் நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி கலந்துகொண்டார்




சேலம். நவ.2–

உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு (01.11.2025) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், திண்டமங்கலம் ஊராட்சியில் நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, பார்வையாளராக கலந்து கொண்டு பேசியதாவது:

உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு இன்றைய தினம் சேலம் மாவட்டத்திலுள்ள 385 கிராம ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம சபை கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டில் ஒளிவு மறைவற்ற வெளிப்படைத்தன்மையினை ஏற்படுத்திடும் வகையில் அதிகாரமிக்க இத்தகைய கிராம சபை கூட்டம் நடத்தப்படுகிறது.

இதில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல், கிராம ஊராட்சியின் கடந்த ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை, ஊரகப் பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் எற்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டம், தூய்மை பாரத இயக்கம் மற்றும் அரசின் பிற முக்கிய திட்டங்கள் குறித்த விபரங்கள் பொதுமக்கள் மத்தியில் விவாதிக்கப்பட்டது.

குறிப்பாக ஊரகப் பகுதிகளில் ஏடிஸ் கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உறுதி செய்ய அனைத்து குக்கிராமங்களிலும் ஒட்டுமொத்த துப்புரவு பணி முழுமையாக மேற்கொள்ளுதல், அனைத்து அரசு அலுவலகங்களை சுத்தம் செய்தல், சுத்தமான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்தல், மேல் நிலை நீர் தேக்கத் தொட்டி, தரை மட்ட நீர் தேக்கத் தொட்டி மாதம் இருமுறை சுத்தம் செய்தல், தகுந்த அளவு குளோரின் கலந்து குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்தல், புதிய கட்டுமான பணிகள் நடக்குமிடங்கள் மற்றும் இதர தண்ணீர் தேங்கும் இடங்களில் தண்ணீர் தேங்காமலும், அவற்றை முறையாக அகற்றியும், கொசுக்கள் உற்பத்தியாகாமல் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்வது குறித்தும், மேலும் பருவகாலங்களில் நீர்நிலைகளில் பள்ளிமாணாக்கர்கள்,இளைஞர்கள் பாதுகாப்பான முறையில் இறங்குவதை பெற்றோர்கள் உறுதி செய்திடுவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

அந்தவகையில்திண்டமங்கலம் ஊராட்சியில் சுகாதாரத்தை முழுமையாக கடைபிடித்து நோயற்ற கிராமமாகவும், சுத்தமான பசுமையான கிராமமாகவும், சமூக பாதுகாப்பு நிறைந்த கிராம மாகவும் விளங்கிட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இந்தக்கூட்டத்திற்கு அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் வருகை புரிந்து இப்பகுதியின் மேம்பாட்டிற்கு மேலும் என்னென்ன தேவைகள் என்பதை கேட்டறிந்துள்ளனர். மேலும், தங்கள் துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத்திட்டங்களை எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளலாம்என்பது குறித்தும்விரிவாகஎடுத்துரைத்தனர்.

இந்த கிராமசபை கூட்டத்தில் மத்திய,மாநில அரசுகளால்கிராமப்புற மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும் திட்டங் களை எடுத்துரைக்கப்படுகிறது. மேலும், ஊராட்சிகளின் வரவு, செலவு கணக்குகள் புதியதாக மேற்கொள்ளப்படும்வளர்ச்சிதிட்ட பணிகள் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்இராபிருந்தாதேவி, பேசினார்.

இக்கிராம சபை கூட்டத்தில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அருளாளன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.தனபால் உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# புதுச்சேரியில் இருந்து விற்பனைக்காக மதுபானங்களை காரில் கடத்தி வந்த மூவர் கைது.: 900 மது பாட்டில்கள் பறிமுதல்



விழுப்புரம் நவ:02

விழுப்புரம் மாவட்டம் வளவனூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட லிங்காரெட்டிபாளையம் அருகே வளவனூர் காவல் நிலைய ஆய்வாளர் அருள் செல்வம் காவலர்கள் தலைமை காவலர் ராமச்சந்திரன் மற்றும் சரண்ராஜ் ஆகியோர் தலைமையில் இரவு ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்பொழுது வாகன தணிக்கை செய்த போது அவ்வழியாக வந்த நான்குசக்கர வாகனத்தை நிறுத்தி சோதனை மேற்கொண்டதில் அதில் புதுச்சேரி அரசு மதுபானங்கள் இருந்ததை கண்டறிந்து கடத்தி வந்த இருவரை கைது செய்து விசாரித்த போது பாண்டிச்சேரி வில்லியனூர் மேல் கொத்தமங்கலம் பகுதியைச் சேர்ந்த வைத்தியலிங்கம் என்பவரின் மகன் சிவசங்கர் மற்றும் அதே பகுதியைச் சேர்ந்த இருசப்பன் என்பவரின் மகன் ஆனந்தகுமார் ஆகியோர் கைது செய்து விசாரணை மேற்கொண்டதில் விழுப்புரம் ஜி ஆர் பி தெருவை சேர்ந்த ரவி என்பவரின் மகன் விஜய் என்பவருக்கு வாங்கி வந்ததாக கூறியதையடுத்து காவலர்கள் விரைந்து சென்று துரிதமாக செயல்பட்டு ஜிஆர்டி தெருவை சேர்ந்த விஜய் என்பவரையும் கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் 900 மது பாட்டில்கள் 20 லிட்டர் சாராயம் ஒரு கார் பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் இரவு வந்து பணியில் விழிப்புடன் விழிப்புடனும் செயல்பட்ட போலீசாருக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சரவணன் நேரில் அழைத்து நற்சான்றிதழ் வழங்கி பாராட்டினார்

# திருச்சி மாவட்டத்தில் 3,4 ஆகிய தேதிகளில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் நடைபெறுகிறது

திருச்சி. நவ.2–

வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 12.08.2025 அன்று முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள 1,211 நியாய விலைக் கடைகளைச் சேர்ந்த 86,112 குடும்ப அட்டைகளில் உள்ள 1,03,855 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களிலேயே குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அடுத்து வரும் 2025ஆம் நவம்பர் மாதத்தில் 03.11.2025 மற்றும் 04.11.2025 ஆகிய தேதிகளில் வயதுமுதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கு நேரடியாக சென்று, குடிமைப் பொருட்களை விநியோகம் செய்திட அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் முதலமைச்சர் தாயுமானவர் திட்டம் மூலம் இல்லம் தேடி குடிமைப் பொருட்கள். 03.11.2025 மற்றும் 04.11.2025 ஆகிய தேதிகளில் விநியோகம் செய்யப்பட உள்ளது. இந்த இரண்டு தினங்களில் பயனாளிகள் குடிமைப் பொருட்களை அவர்களின் இல்லங்களிலேயே பெற்றுக்கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் தெரிவித்துள்ளார்.



சேலம் மாவட்டம் கொளத்தூர் வட்டாரம், கொளத்தூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட சுகாதார அலுவலர் மரு. சௌண்டம்மாள் (சேலம்). மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பக வள்ளி ஆகியோர் உள்ளனர்,



கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட சங்கராபுரம் வடக்கு ஒன்றியம் ரங்கப்பனூர் ஊராட்சி மன்ற தலைவர் அர்ச்சனா காமராஜன் ஏற்பாட்டில் நாம் தமிழர் கட்சி, பாரதிய ஜனதா கட்சி, தமிழக வெற்றி கழகம் போன்ற மாற்று கட்சி சேர்ந்த 100க்கும் மேற்பட்ட இளைஞர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். திமுகாவில் இணைந்த அனைவருக்கும் ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் கழக இரு வண்ண வேஷ்டிகள் அணிவித்து தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். இந்நிகழ்வில் சங்கராபுரம் வடக்கு ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் அசோக்குமார் உடன் இருந்தார்.



அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் வட்டம். பொன்பரப்பிபட்டி கிராமத்தை சேர்நத நபர் நீரில் மூழ்கி உயிரிழந்தமைக்கு முதலமைச்சரின் நிவாரண நிதிக்கான காசோலை ரூ.3 லட்சத்தினை வழங்கினார். உடன் பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் / நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் உட்பட பலர் உள்ளனர்.

# வந்தவாசியில் தமுஎகச சிறப்பு கருத்தரங்கம்




வந்தவாசி, நவ 02

வந்தவாசியில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி சீனுவாசா திருமண மண்டபத்தில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் திண்ணை 130 நிகழ்வாக கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு கிளைத் தலைவர் பூங்குயில் சிவகுமார் தலைமை தாங்கினார். துணைத் தலைவர்கள் ஏ.பி.வெங்கடேசன், கவிஞர் தமிழ்ராசா, செயற்குழு உறுப்பினர்கள் என்.இராதாகிருஷ்ணன், கோ.பாரதி மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயலாளர் த.சாந்தி வரவேற்றார். நகர்மன்ற துணைத் தலைவர் அன்னை க.சீனிவாசன் தொடக்க உரையாற்றினார். தமுஎகச மாவட்ட தலைவர் நா.முத்துவேலன் வாழ்த்துரை வழங்கினார்.

சிறப்பு அழைப்பாளராக, தமுஎகச மாநில பொதுச் செயலாளர் ஆதவன் தீட்சண்யா அன்பே அறமென எழுக என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட தலைவர் க.வாசு, தமுஎகச கிளைத் தலைவர்கள் பெரணமல்லூர் பி.மாலவன், சேத்பட் எஸ்.பழனி வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக, தென்னாங்கூர் மண்ணுயிர் ரஜினி, ஜான் லாரன்ஸ், முனைவர் ம.மகாலட்சுமி, சார் பிளஸ்சியா ஆகியோர் பாடல்களை பாடினர்.

நிகழ்ச்சியை தமுஎகச இணைச் செயலாளர் எம்.பி.வெங்கடேசன், ம.ரகுபாரதி, பெ.எட்டியப்பன், முனைவர் சீனிவாசன், ரவி ரங்கநாதன், கவிஞர் பூவிழி, வந்தை குமரன் ஒருங்கிணைத்தனர். வந்தை வட்ட கோட்டைத் தமிழ்ச் சங்க தலைவர் பீ.ரகமத்துல்லா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வட்டார செயலாளர் அ.அப்துல் காதர், ஜோதி நிதி உதவி பள்ளி தலைமை ஆசிரியர் பழ.சீனிவாசன், எழுத்தாளர் சா.ரஷீனா, விஏஓ அர்ஜுனன், திவாகர், ஆக்ஸ்போர்ட் சதானந்தன், ஓய்வு பெற்றோர் சங்க பால்ராஜ், பெரணமல்லூர் தமுஎகச கிளை கௌதம் முத்து, காளிதாஸ், ஆசிரியர் பூபாலன், செல்வராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இறுதியில் பொருளாளர் எஸ்.காசி நன்றி கூறினார்.

## திருவள்ளூர் அருகே கணவன் மனைவி கருத்து வேறுபாட்டால் தனியாக வசித்து வந்த கணவர் தூக்கிட்டு தற்கொலை :

திருவள்ளூர் நவ 02 :

ராணிப்பேட்டை மாவட்டம் ஜோதி நகரைச் சேர்ந்தவர் பலராமன் மனைவி கலாவதி (62). இவர்களது மகன் முருகனுக்கு கடந்த 16 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்ற நிலையில் கணவன் மனைவி கருத்து வேறுபாடு காரணமாக தனியாக திருவள்ளூர் அடுத்த சிறுவானூர் கண்டிகை கிராமத்தில் உள்ள உறவினர் வீட்டில் தங்கி வேலை பார்த்து வந்துள்ளார்.

இந்நிலையில் உறவினர் வெங்கடேசன் வேலைக்கு அழைத்துச் செல்வதற்காக வீட்டில் வந்து பார்த்த போது தூக்கில் தொங்குவதை கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார். இதுகுறித்து வெங்கடேசன் தாய் கலாவதிக்கு கொடுத்த தகவலின் பேரில் விரைந்து வந்து பார்த்துள்ளார். இதுகுறித்து தாய் கலாவதி புல்லரம்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருவள்ளூர் விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டத்தில் 13 பேருக்கு ரூ.9,14 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் : மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் வழங்கினார் :



திருவள்ளூர் நவ 02 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பாக விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமை தாங்கி பேசினார்.

முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் திருவள்ளூர் மாவட்டத்தில் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ்; பசுந்தாள் உர சாகுபடியினை ஊக்குவித்தல் திட்டம் செயல்படுத்தப்பட்டு 7500 ஏக்கரில் ரூ.93.73 இலட்சம் மானியத்தில் பசுந்தாள் உர பயிர் பயிரிட திட்டமிடப்பட்டு விவசாயிகளுக்கு தற்பொழுது வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் பசுந்தாள் உர விதைகள் ஒருகிலோ முழு விலையாக ரூ.129.4 இதில் 50 சதவீதம் மானியத்தில் ரூ.62.50 வழங்கப்பட்டு வருகிறது.

தொழில் முனையும் வேளாண் பட்டதாரிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் ரூ.10 லட்சம் அல்லது 20 லட்சம் மதிப்பில் விதைகள் உரங்கள் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்கள் விற்பனை மையம், நோய் மற்றும் பூச்சி மேலாண்மை, மதிப்புகூட்டு பொருட்கள் வேளாண் உயர் தொழில்நுட்பம் மற்றும் இதர பிரிவுகளில் தொழில் தொடங்க 30% மானியம் வழங்கப்படும். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் திட்டத்தின் கீழ் 155 எண்கள் விசைத்தெளிப்பான்கள் இலக்கு பெறப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள செங்குன்றம், திருவள்ளூர் மற்றும் திருத்தணி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் (e-NAM) திட்டத்தில் வேளாண் விளைபொருட்களுக்கான மறைமுக ஏலம் மூலம் நல்ல விலை கிடைக்க வழிவகை செய்கிறது. இடைத்தரகர் இன்றி விற்பனை செய்யப்பட்டு பணம் நேரடியாக வங்கி கணக்கு வரவு வைக்கப்படுகிறது என்று கூறினார்.

அதனைத் தொடர்ந்து வேளாண்மை உழவர் நலத்துறை துறைசார்பில் 2 விவசாயிகளுக்கு மானிய விலையில் 100 கிலோ நிலக்கடலை மற்றும் தோட்டக்கலை ரூ மலைப்பயிர்கள் துறை சார்பில் 1 விவசாயிக்கு பண்ணை குட்டை அமைக்க ரூ.75,000 மானியமும், கூட்டுறவுத் துறை சார்பில் 10 விவசாயிகளுக்கு ரூ.8,11,874 மதிப்பிலான பயிர் கடனுக்கான ஆணைகள் என மொத்தம் 13 விவசாயிகளுக்கு ரூ.9,14,874 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் வழங்கினார். மேலும் இக்கூட்டத்தில் 180க்கும் மேற்பட்ட கோரிக்கை மனுக்களை விவசாயிகளிடமிருந்து பெற்றுக்கொண்டு மாவட்ட ஆட்சியர் மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுத்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் (பொ) பால்ராஜ், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் பா.ஜெயஸ்ரீ, திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை இணை பதிவாளரும் செயலாட்சியருமான மீனா அருள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வேதவல்லி, வேளாண்மை துணை இயக்குநர் ஸ்ரீ சங்கரி, கால்நடை பராமரிப்பு துறையின் மண்டல இணை இயக்குநர் ப.ஜெயந்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம்: கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் கலந்தாய்வு



கள்ளக்குறிச்சி நவ 02

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் 2026 குறித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் கலந்தாய்வு மேற்கொண்டார்.

ஆட்சியரக கூட்டரங்கில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு தலைமை வகித்து அவர் பேசியதாவது:

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான அறிவிப்பு 27.10.2025 இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு ஜனவரியில் வெளியான இறுதி வாக்காளர் பட்டியலுடன் 2002இல் வெளியான சிறப்பு தீவிர திருத்த வாக்காளர் பட்டியல் அடிப்படையில் சரிபார்ப்பு மற்றும் பொருத்துதல் இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

வாக்காளர்கள் 2002 ஆம் ஆண்டின் வாக்காளர் எண், தொகுதி எண், பாகம் எண், தொடர் வரிசை எண் தொடர்பான விவரங்களை இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதள முகவரியில் தெரிந்துக்கொள்ளலாம்.

மேலும், வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்பு பணி 04.11.2025 முதல் 04.12.2025 வரையிலும், வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு 09.12.2025 கோரிக்கைகள் மற்றும் எதிர்ப்பு காலம் 09.12.2025 முதல் 08.01.2026 வரையிலும், அறிவிப்பு கட்டம் (விசாரணை மற்றும் சரிபார்ப்பு) 09.12.2025 முதல் 31.01.2026 வரையிலும் நடைபெற உள்ளது. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு 07.02.2026 அன்று வெளியிடப்படும் என தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு தீவிர திருத்தம் தொடங்கப்பட்டதும், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று தற்போது வாக்காளர் பட்டியலில் உள்ள அனைத்து வாக்காளர்களுக்கும், முன்னதாக அச்சிடப்பட்ட வாக்காளர் கணக்கெடுப்பு படிவம் 2 பிரதிகளில், ஒரு பிரதியினை வாக்காளரிடம் வழங்குவார். ஒரு பிரதியினை வாக்குச்சாவடி நிலை அலுவலர் ஒப்புகைச் சீட்டாக பெற்றுக் கொள்வார்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி நிலை முகவர்கள், வாக்குச் சாவடி நிலை அலுவலர்களுடன் இணைந்து வரைவு வாக்காளர் பட்டியலை ஆய்வு செய்து திருத்தங்கள், நீக்கங்கள் மற்றும் சேர்த்தல் போன்ற தேவையான மாற்றங்களை அடையாளம் காண்பர் என்றார் மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான எம்.எஸ்.பிரசாந்த்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ஜீவா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ம.தனலட்சுமி, வாக்குப் பதிவு அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்

## வாக்காளர் சிறப்பு திருத்தம் முதற்கட்ட பயிற்சி முகாம்

வந்தவாசி, நவ 02:

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி வாக்கு சாவடி



நிலைய முகவர்களுக்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் முகாம் முதற்கட்ட பயிற்சி நடைபெற்றது. இதில் வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் தி.செல்வம், வட்டாட்சியர் எஸ்.சம்பத் குமார் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்று கருத்துரைகளை வழங்கினர்.

## மாமன்னர் இராசராச சோழன் புகழ் போற்றுவோம்! : முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

சென்னை : தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில், "தமிழர்களின் கலைத்திறன், போர்த்திறன், கப்பற்கலை, பாசனமுறை என அனைத்தின் உச்சமாக ஆட்சிசெய்து மங்காப் புகழொளியைத் தமதாக்கிக் கொண்ட மாமன்னர் இராசராச சோழனின் 1040ஆவது சதய விழா இன்று! தஞ்சை மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டு, நேற்றுமுதல் பல்வேறு நிகழ்ச்சிகளுடன், தஞ்சை மாநகர் முழுவதும் வண்ண விளக்குகள் ஒளிர, சதய விழா கோலாகலத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழர்களின் பெருமையாக அவர் நமக்காக விட்டுச் சென்றுள்ள பங்களிப்புகளை நினைவுகூர்ந்து, பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் சொல்லி, மாமன்னர் இராசராச சோழன் புகழ் போற்றுவோம்! "இவ்வாறு தெரிவித்துள்ளார்.



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி பரமத்தி ஒன்றியம். கந்தம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் முகாமில் உடனடி தீர்வாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் அடையாள அட்டையினை வழங்கினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.




ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம். குளூர் ஊராட்சி செங்கரம்பாளையம் கிராமத்தில் ஊர்த்தலைவர் கிருஷ்ணன் தலைமையில் உள்ளாட்சி தினத்தினை முன்னிடடு நடைபெற்ற கிராம சபைகூட்டத்தில் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி சிறப்பு பார்வையாளராக பங்கேற்று பேசினார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA**, on behalf of **K.SABIULLA**, printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421